World ChristianFellowship
www.wcflondon.com
wcflondon@gmail.com

# கலாத்தியர்

## பாடம் 03 அப்போஸ்தலனாகிய பவுல்

பவுல் இங்கு மூன்று காரியங்களை உறுதிப்படுத்துகிறார்.

1. **பவுலின் அதிகாரம்,**
2. **பவுலின் செய்தி மற்றும்**
3. **பவுலின் நோக்கம்**

## பவுலின் அதிகாரம்

***கலாத்தியர் 1:1-5,***

*பவுல் மற்ற பரிசேயர்களை போல் கபடமான வாழ்க்கை வாழாமல் தேவனுக்காய் வைராக்யமாய் வாழ்ந்தார். பவுல் மோசேயினால் கற்பிக்கபட்ட எல்லா கட்டளைகளையும், பாரம்பரியங்களையும், விழாக்களையும் மற்றும் பலி இடுதலையும் பின்பற்றி வந்தார்.*

***கலாத்தியர் 1:15-17,*** *15. அப்படியிருந்தும், நான் என் தாயின் வயிற்றிலிருந்தது முதல், என்னைப் பிரித்தெடுத்து, தம்முடைய கிருபையினால் அழைத்த தேவன்,, 16. தம்முடைய குமாரனை நான் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கும்பொருட்டாக, அவரை எனக்குள் வெளிப்படுத்தப் பிரியமாயிருந்தபோது, உடனே நான் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் யோசனைபண்ணாமலும்; 17. எனக்கு முன்னே அப்போஸ்தலரானவர்களிடத்திலே*

*எருசலேமுக்குப் போகாமலும்; அரபிதேசத்திற்குப் புறப்பட்டுப்போய், மறுபடியும் தமஸ்கு ஊருக்குத் திரும்பிவந்தேன்.*

*எனக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பு எருசலேமில் எவரிடமும் இருந்து கொடுக்க படவில்லை, எனக்கு கிறிஸ்துவே கொடுத்தார்.*

- *இவர் தாயின் கருவில் இருந்த போதே பிரித்து எடுக்கப்பட்டது தேவனின் திட்டமே,*
- *தமஸ்கு பாதையில் கர்த்தரை சந்தித்தது,*
- *மூன்று வருடம் பாலைவனத்தில் காலம் செலவழித்தார்,*
- *தான் பிரசங்கிக்கும் சுவிசேஷம் வனாந்திரத்தில் இருக்கும் போது ஆண்டவரிடமிருந்து பெற்றது.*

*கண்டிப்பான, சகிப்புத்தன்மையற்ற வைராக்கியம் நிறைந்த, மற்றும் சட்ட திட்டங்களின் பாதுகாவலனாய் விளங்கியவர் கிறிஸ்துவுக்குள் விடுதலையான அப்போஸ்தலனாய் மாறி, சட்டங்களிலிருந்து விடுதலை பெற்றார்.*

*இவர் இயேசுவிடம் இருந்து பெற்ற விடுதலை என்னும் பட்டயத்தை குறித்து கலாத்தியர் 5:1 ல் எழுதுகிறார்.*

*இவர் மத கோட்பாடுகளில் இருந்து விடுதலை பெற்றார். அவைகள் ஆத்தும இரட்சிப்பிற்கு உதவவில்லை.*

***"நான் தேவனால் அனுப்பப்பட்டேன்."***

*நமது தேவன் அவ்வுளவு பெரிய பொறுப்புகளை ஒரு தனி நபர் மேல் வைத்தார். நாம் அப்போஸ்தலர் நடபடிகள் 12 ம் அதிகாரத்தில் இருந்து வாசிக்கும் போது ஒரு மனிதன் மட்டும் ஆண்டவருக்காய் காரியங்கள் செய்வதை பார்க்க முடியும்.*

*அவர்கள் அவரை சிறையில் அடைத்தனர்,*

*கல்லெறிந்தனர்,*
*கப்பல் சேதத்தில் இருந்தார்*
*தூக்கி எறிந்தனர்,*
*அவரை சாக கிடத்தினார்.*
*ஆனால் அவர் சாகவில்லை, தேவன் அதை நேரிட விடவில்லை,*

*ஏன்?*
*யூதாஸ் தற்கொலை செய்து கொண்டான் மற்றவர்கள் சொல்லலாம் இவர் வெளியாள் என்று.*

*சுவிசேஷத்தை யாராலும் அடக்க முடியவில்லை!*

## அப்போஸ்தலனாகிய பவுல்

*தன்னை ஒரு அப்போஸ்தலன் என்று நிரூபிக்கவோ அல்லது காண்பித்து கொள்ளவோ தேவை இல்லை ஏனென்றால் சபை அனைத்திற்கும் தெரியும் அப்போஸ்தலன் என்றால் யார் என்று மற்றும் பவுல் ஒரு அப்போஸ்தலன் என்றும் அனைவரும் அறிவர்.*

*பவுல் சுவிசேஷத்தின் வெளிப்பாடுகளை இன்னோரு அப்போஸ்தலரிடம் இருந்து பெறவில்லை.*

- ✓ *பவுல் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்.*
- ✓ *தேவனால் அழைக்கப்பட்டவர்.*
- ✓ *தேவனால் நீதிமானாக்கப்பட்டார்*
- ✓ *அவர் தமஸ்குவில் தேவனால் மாற்றப்பட்டார் மற்றும்*
- ✓ *வனாந்திரத்தில் தேவனால் போதிக்கப்பட்டார்*

## *யார் அப்போஸ்தலன்?*

*அப்போஸ்தலன் என்றால் தூதுவர் அல்லது தூதன் என்று அர்த்தம்.*

*பவுல் புதிய ஏற்பாட்டை வாசிப்பர்களுக்கு தன்னை அடையாளம் காட்டிக்கொள்ள இந்த வார்த்தையை உபயோகப்படுத்துகிறார்.*

*பின் வரும் பகுதிகளில் நாம் அதை காண முடியும்,*

- *1 மற்றும் 2 கொரிந்தியர்,*
- *ரோமர்,*
- *எபேசியர்,*
- *கொலோசெயர், மற்றும்*
- *இங்கு கலாத்தியர் நிருபத்தில் காண முடியும்.*

*இதை தூதர், பிரதிநிதி என்னும் வார்த்தைகளிலும் அழைக்கலாம்.*

*இன்னும் விளக்க வேண்டுமானால் ஒரு தனிப்பட்ட நபரை சட்டப்பூர்வமாக நியமித்து, அந்த ராஜாவின் அல்லது அரசின் சார்பாக சென்று காரியங்களை நடப்பிப்பவர்.*

*ஒரு நாட்டின் தூதரகம் இன்னோரு நாட்டில் செயல்படுவதை நினைவில் வைத்து கொள்ளுங்கள்.*

*இயேசு அப்படிப்பட்ட சீஷர்களை தான் தெரிவு செய்தார், பன்னிரெண்டு பேர் மாத்திரமே.*
***லூக்கா 6:12-16,*** *12. அந்நாட்களிலே, அவர் ஜெபம் பண்ணும்படி ஒரு மலையின்மேல் ஏறி, இராமுழுதும்*

*தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தார். 13. பொழுது விடிந்தபோது, அவர் தம்முடைய சீஷர்களை வரவழைத்து, அவர்களில் பன்னிரண்டுபேரைத் தெரிந்துகொண்டு, அவர்களுக்கு அப்போஸ்தலர் என்று பேரிட்டார். 14. அவர்கள் யாரெனில், பேதுரு என்று தாம் பேரிட்ட சீமோன், அவன் சகோதரனாகிய அந்திரேயா, யாக்கோபு, யோவான், பிலிப்பு, பர்த்தொலொமேயு, 15. மத்தேயு, தோமா, அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபு, செலோத்தே என்னப்பட்ட சீமோன், 16. யாக்கோபின் சகோதரனாகிய யூதா, துரோகியான யூதாஸ்காரியோத்து என்பவர்களே.*

*நீங்கள் இதை **மத்தேயு 10:1-4** லும் காணலாம்.*

*இயேசு தம்முடைய சீஷர்களில் பன்னிருவரை தெரிந்து எடுத்து அவர்களுக்கு அப்போஸ்தலர் என்று பெயரிட்டார். அந்த பன்னிரெண்டு பேரும் அதிகாரம் கொண்ட பிரதிநிதிகளாய் செயல்ப்பட்டார்கள்.*

*அப்போஸ்தலர் 3ம் அதிகாரத்தில் பேதுரு ஒரு முடவனை சுகப்படுத்துகிறார்.*

*அவர் என்ன மற்றும் எப்படி சொல்கிறார்?*

***அப்போஸ்தலர் 3:6**, அப்பொழுது பேதுரு: வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை; என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன்; <u>நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட என்று சொல்லி;</u>*

*இங்கு அவர் தன்னுடைய பெயரை உபயோகப் படுத்தவில்லை, தன்னை அழைத்து அபிஷேகித்தவரின் பிரதிநிதியாகவே செயல்பட்டார்.*

*அப்பொழுது பன்னிரெண்டு சீஷர்கள் இருந்தார்கள். யூதாஸ் தற்கொலை செய்து கொண்டான். அவன் இடத்திற்கு மத்தியா தெரிந்து எடுக்கப்பட்டார். பவுல் பிறகு அப்போஸ்தலனாக சேர்க்கப்பட்டார்.*

***I கொரிந்தியர் 15:9-10,*** *9. நான் அப்போஸ்தலரெல்லாரிலும் சிறியவனாயிருக்கிறேன்; தேவனுடைய சபையைத் துன்பப்படுத்தினதினாலே, நான் அப்போஸ்தலனென்று பேர்பெறுவதற்கும் பாத்திரன் அல்ல.10. ஆகிலும் நான் இருக்கிறது தேவகிருபையினாலே இருக்கிறேன்; அவர் எனக்கு அருளிய கிருபை விருதாவாயிருக்கவில்லை; அவர்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டேன், ஆகிலும் நான் அல்ல, என்னுடனே இருக்கிற தேவகிருபையே அப்படிச் செய்தது*

*அவர் தன்னை அப்போஸ்தலனாக கருத தகுதி உடையவர் அல்ல என்று கருதினார் ஏனென்றால் அவர் முன்பு தேவ தூஷணம் செய்பவராக இருந்தார்.*

## அப்போஸ்தலனாக தேவையான தகுதிகள்

1. **இயேசு கிறிஸ்துவை மாம்சத்தில் கண்டிருக்க வேண்டும்**
   *இயேசு மாம்சத்தில் இருந்தபோது இயேசு கிறிஸ்துவோடு ஊழியத்தில் இருந்திருக்க வேண்டும், அவரின் உயிர்த்தெழுதலை கண்டிருக்கவேண்டும்.*
   ***அப்போஸ்தலர் 1:21-22***

   *பவுல் உயிர்த்தெழுந்த இயேசுவின் தனிப்பட்ட சாட்சியாக இருக்கிறார்.*
   ***1 கொரிந்தியர் 15:1-9***

2. ***இயேசு கிறிஸ்துவின் மாணவனாக இருந்திருக்க வேண்டும்.***

*அவர்கள் இயேசுவோடு இருந்த காலத்தில் அவரிடமிருந்து சுவிசேஷத்தை கற்று கொண்டனர். அவர்கள் தான் தேவனிடம் இருந்து கற்றுக்கொண்ட சுவிசேஷத்தை எந்த மாற்றமும் இல்லாமல் மற்றவர்களுக்கும் உபதேசித்தனர்.*

***யோவான் 16:7-15***

*பவுல் இயேசுவிடம் கிறிஸ்துவிடம் இருந்து சத்தியத்தை நேரிடையாக பெற்றுக்கொண்டார்.*

***கலாத்தியர் 1:11-12***

3. ***அற்புதங்கள் நடப்பிக்க பாத்திரவான்களாய் இருக்க வேண்டும்***

*அப்போஸ்தலர்களின் செய்தியை அற்புதங்கள் உறுதி செய்கின்றன, அவைகள் ஒரு மனிதன் அப்போஸ்தலனாக தகுதி உள்ளவன் என்பதையும் நிரூபிக்கின்றன.*

***அப்போஸ்தலர் 2:43***

*பவுல் செய்த அற்புதங்கள் மூலம் அவரின் அப்போஸ்தல தன்மை குறித்து கேள்வி கேட்டவர்களுக்கு, அவர் விளக்கம் அளித்தார்.*

***2 கொரிந்தியர் 12:11-12***

*அப்போஸ்தலர் யோவான் தன்னுடைய அப்போஸ்தல தன்மை குறித்து விளக்கம் அளிக்கிறார்.*

***1 யோவான் 1:1-3,*** *1. ஆதிமுதலாய் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப்பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டுப்பார்த்ததுமாயிருக்கிற ஜீவவார்த்தையைக் குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம். 2. அந்த ஜீவன் வெளிப்பட்டது;*

*பிதாவினிடத்திலிருந்ததும், எங்களுக்கு வெளிப்பட்டதுமான நித்தியமாயிருக்கிற அந்த ஜீவனை நாங்கள் கண்டு, அதைக்குறித்துச் சாட்சிக்கொடுத்து, அதை உங்களுக்கு அறிவிக்கிறோம். 3. நீங்களும் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும்படி, நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறதை உங்களுக்கும் அறிவிக்கிறோம்; எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது*

*அப்போஸ்தலர்கள் தான் இயேசுவோடு வாழ்ந்த அனுபவமும், அவர் உயிர்தெழுந்ததை பார்த்த அனுபவமும் கொண்டவர்கள்.*

*அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் தான் ஒரு சபையின் அஸ்திபாரம்.*

***எபேசியர் 2:20,*** *அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகளென்பவர் களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களு மாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக் கல்லாயிருக்கிறார்,*

*புதிய ஏற்பாட்டின் ரகசியமும் சபை தோன்றிய ரகசியமும் பரிசுத்த அப்போஸ்தலர்கள் மூலமாகவே வெளிப்படுத்தப் பட்டது.*

*புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலர்கள் போல் இறை பணியாற்றியவர்கள் வேறு ஒருவரும் இல்லை. புதிய ஏற்பாட்டில் உள்ள கோட்பாடுகள் அப்போஸ்தலர்கள் மூலம் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு கொடுக்கப்பட்டது.*

*பவுல் தான் மனுஷனாலோ அல்லது மனிதர்கள் மூலமாகவோ தேர்ந்தெடுக்க படமால் தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டேன் என்று சொல்ல முடியும்.*

*இயேசு கிறிஸ்து உண்மையிலேயே பிதாவால் அனுப்பப்பட்டவரா?*

*அப்போஸ்தலர்களை இயேசுவால் அங்கீகரிக்க முடியுமா?*
*இயேசுவுக்கு அதிகாரம் இருக்கிறதா?*
*இயேசுவுக்கு அப்போஸ்தலர்களை நியமிக்க அதிகாரம் இருக்கிறதா?*

*ஆம் இயேசு கிறிஸ்துவுக்கு இருக்கிறது!*

*ஏன்?*

*ஏனென்றால் பிதாவானவர் குமாரனை மரித்தோரிலிருந்து எழுப்பினார். தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினதினால் அவரை கிறிஸ்து என்று உறுதிபப்படுத்துகிறார். தேவன் அவரை கிறிஸ்துவை தனது குமாரனாகவும் கர்த்தராகவும் அறிவிக்கிறார்.*

- *உயிர்த்தெழுதல் என்பது கிறிஸ்துவின் மீது தேவன் வழங்கும் அங்கீகாரம்.*
- *அப்போஸ்தல அழைப்பு என்பது அப்போஸ்தலர்களுக்கு கிறிஸ்து வழங்கும் அங்கீகாரம்.*

*உயிர்த்தெழுதல் என்பது தேவன் கிறிஸ்துவுக்கு கொடுத்த அங்கீகாரம். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் என்பது புதிய ஏற்பாட்டின் துவக்கமாகும்.*

*பழைய ஏற்பாடானது கடைசியான பலியின் மூலம் முற்று பெற்றது, மற்றும் தேவ ஆலயத்தின் திரை சீலை மேலிருந்து கீழாக கிழிக்கப்பட்டது.*

*ஆசாரியத்தன்மை முற்று பெற்றது.*
*இனிமேல் எந்த பலியும் இட தேவை இல்லை.*
*மோசேயின் மூலம் கொடுக்கப்பட்ட எல்ல சடங்குகளும் முடிவு அடைந்தது.*
*இனிமேல் ஓய்வு நாள் அனுசரிப்பு இல்லை,*
*இனி விசேஷித்த நாட்கள் இல்லை,*
*இனி எந்த பரிசுத்த நாளும் குறிப்பாக இல்லை*
*எல்லாம் முடிந்தது.*

*பழைய சகாப்தம் சிலுவையோடு முடிந்தது!*
*புதிய சகாப்தம் உயிர்த்தெழுதல் மூலமாய் துவங்கியது!!*
*நீங்கள் மீண்டும் பழைய முறைமைகளுக்கு போக வேண்டிய அவசியம் இல்லை.*

*இனி ஏன் விருத்தசேதனம்?*
*இனி ஏன் நாட்களை சிறப்பிக்க தேவை?*
*இனி ஏன் சடங்குகள்?*
*இனி ஏன் பெரிய விருந்து நாட்கள்?*
*இனி ஏன் ஓய்வு நாள் அனுசரிப்பு?*

*இவை எல்லாம் நமக்கு ஒரு நிழலாக அல்லது மாதிரியாக வர போகும் காரியங்களுக்காக காண்பிக்கப்பட்டது.*

**கொலோசெயர் *2:17*,** *அவைகள் வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது; அவைகளின் பொருள் கிறிஸ்துவைப் பற்றினது*

*இனிமேல் அவைகள் நமக்கு தேவை இல்லை.*

*புதிய உடன்படிக்கை கிருபை மற்றும் விசுவாசத்தை பொறுத்தது. அப்போஸ்தலர்கள் இயேசுவின் உயித்தெழுதலுக்கு பின்பு தான் சுவிசேஷம் அறிவிக்க ஆரம்பித்தனர், அப்போஸ்தல நடபடிகள் அதிகாரங்கள் **2,3, 4, 5, 10, 13 17 &26** ல் காணலாம்.*

*அவர்கள் புதிய உடன்படிக்கையின் மூலமாய் தேவன் பாவிகளையும் அவிசுவாசிகளையும் விசுவாசத்தை கொண்டு இரட்சிக்கிறார் என்று பிரசங்கித்தனர்.*

*இயேசுவே பிதாவின் குமாரன்.*
*நமக்கு அது எப்படி தெரியும்?*

*ஏனென்றால் பிதாவானவர் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார். இயேசு தம்முடைய சொந்த இரத்தத்தினால் தேவனுடைய நீதியை நிறைவேற்றினார், தன்னுடைய ஜனங்களின் மீட்பிற்கு வழி உண்டாக்கினார்.*

*எனவே பவுல் அப்போஸ்தலன் எனும் அடையாளம் மூலமும் உயிர்த்தெழுந்த இயேசுவின் மூலமும் அதிகாரம் பெற்றார்.*

## பவுலின் அப்போஸ்தல அதிகாரம் தன்னுடன் இருப்பவர்கள் மூலம் உண்டானது என்று காட்டுகின்றார்

***வசனம் 2,*** *"என்னுடனேகூட இருக்கிற சகோதரரெல்லாரும், கலாத்தியா நாட்டிலுள்ள சபைகளுக்கு எழுதுகிறதாவது."*

*இங்கு பவுல் "என்னுடனேகூட இருக்கிற அப்போஸ்தலர்கள்" என்று சொல்லவில்லை அவரோடு பர்னபா மற்றும் பிற பிரசங்கியார்களும் இருந்தார்கள்*

*அவர்கள் எல்லாரும் சகோதரராய் இருந்தார்கள். பவுல் அப்போஸ்தலனாகவும் மற்றவர்கள் சகோதரர் என்கிற வேறுபாட்டை நாம் இங்கு காண முடியும்.*

*பவுல் அவருடைய மற்ற நிரூபங்களில் அவர்களின் பெயர்களை தனி தனியாக குறிப்பிட்டு இருப்பார். அனால் இங்கு அவர்களை வெறும் "சகோதரர்" என்று தான் குறிப்பிடுகிறார்."*

*பர்னபா, சீலா, தீமோத்தேயு, தீத்து அல்லது யார் உடன் இருந்தார்களோ அவர்களின் பெயரை அவர் நிரூபங்கள் எழுதும் போது குறிப்பிட்டு இருக்கின்றார். பவுல் தன்னோடு இருந்த பிரசங்கம் செய்யும் சகோதரர்களின் ஐக்கியத்தை விரும்பினார், அனால் அவர்கள் அப்போஸ்தலர்கள் அல்ல.*

## *பவுலின் செய்தி*

***வசனம்*** *3 & 4, பிதாவாகிய தேவனாலும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக; 4. அவர் நம்மை இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று விடுவிக்கும்படி நம்முடைய பிதாவாகிய தேவனுடைய சித்தத்தின்படியே நம்முடைய பாவங்களுக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்;*

*ரோமர், 1 மற்றும் 2 கொரிந்தியர், எபேசியர், பிலிப்பியர் மற்றும் இங்கும் பவுல் ஒரே மாதிரியான வாழ்த்துதலை சபைக்கு சொல்வதை காண முடியும். அவர் ஒரு கட்டளை போல சொல்லாமல் ஒரு அன்போடு சொல்வதை இங்கு காண முடியும்,*

*பிதாவாகிய தேவனாலும்,*
*நம்முடைய* ***கர்த்தராகிய*** *இயேசுகிறிஸ்துவினாலும்*
*உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. ”*

- *இரட்சிப்பிற்கு கிருபை தான் மூலதனம்*
- *இரட்சிப்பின் மூலம் நமக்கு சமாதானம் கிடைக்கிறது.*

- ✓ *கிருபை தான் தேவனின் எல்லா ஆசீர்வாதங்களின் அடித்தளம்.*
- ✓ *ஒரு விசுவாசி ஆசீர்வாதத்தை அனுபவிப்பது என்றால் அது சமாதானத்தை அனுபவிப்பது ஆகும்.*

*கிருபையும் சமாதானமும் நமக்கு எவற்றை கொடுக்கும்?*

- *நாம் கிருபையால் இரட்சிக்கப்பட்டு சமாதானத்தை பெற்றோம்.*
- *எல்லாவற்றையும் புரிந்துக்கொள்ளும் தன்மையை சமாதானம் தரும்.*
- *நமக்கும் தேவனுக்கும் சமாதானம் ஏற்பட்டது.*
- *நமக்கு மரண பயம் இல்லை.*
- *உலகத்தால் ஏற்படும் கலக்கம் நமக்கு இல்லை.*
- *நமக்கு எதிரியை கண்டு பயம் இல்லை.*
- *நமக்கு சாத்தானை கண்டு பயம் இல்லை.*
- *நமக்கு பிசாசுகளை கண்டு பயம் இல்லை.*
- *நமது வாழ்க்கையில் என்ன நடந்தாலும் பயம் இல்லை. ஏனென்றால் நாம் தேவ சமாதானத்தோடு வாழ்கிறோம், நமக்கு நித்திய வாழ்க்கை நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது. அதை அனுபவிக்க நாம் காத்துக்கொண்டு இருக்கிறோம்.*

***வசனம் 4,*** *கிருபையும் சமாதானமும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலம் வருகிறது "அவர் நம்மை இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று விடுவிக்கும்படி நம்முடைய பிதாவாகிய தேவனுடைய சித்தத்தின்படியே நம்முடைய பாவங்களுக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்*

***இயேசு கிறிஸ்துவின் இறப்பின் தன்மை.***

*அவர் மரிக்கும் போது என்ன நடந்தது?*
*எப்படி மற்றும் ஏன் அவர் மரித்தார்?*

*இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக தன்னையே கொடுத்தார். இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக தன்னையே பலியாக ஒப்புக்கொடுத்தார். இயேசு கிறிஸ்துவின் மரணம் நம்முடைய பாவங்களுக்காக செலுத்தப்பட்ட பலி.*

***யோவான் 1:29,*** *"மறுநாளிலே யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு: இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி.!"*

*விருத்தசேதனம் இரட்சிப்பிற்கு ஒன்றும் செய்யவில்லை.*
*சிறப்பு பண்டிகைகளை கடைப்பிடிப்பதில் பயனில்லை.*
*சடங்குகள் பின்பற்றுவதில் பயனில்லை.*
*சட்டதிட்டங்கள், அறநெறிகள் பயனற்றவை.*

***கலாத்தியர் 2:20, "****கிறிஸ்துவுடனேக்கூட சிலுவையிலறையப் பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய*

*குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்.''*

*இயேசு மரிக்கும் போதே தெய்வீக அற்புதமாக நாமும் அவருடன் மரித்தோம்.*

*நம்முடைய பாவங்களுக்கான விலை செலுத்தப்பட்டது. அவர் இப்பொழுது நம்முடன் வாழ்கிறார்.*

*விருத்தசேதனத்தினால் எந்த பயனும் இனி இல்லை.*
*ஞானஸ்தானத்தினால் எந்த பயனும் இல்லை.*
*பாவிகளை மீட்கும் விலை இயேசு கிறிஸ்துவின் மரணத்தின் மூலம் கொடுக்கப்பட்டது. பாவிகளை மன்னிக்கும் மற்றும் மீட்கும் விலையும் செலுத்தப்பட்டு விட்டது. அவரின் மரணம் தான் நம் பாவத்திற்கு பிராயச்சித்தம்.*

***V4,*** *"அவர் நம்மை இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று விடுவிக்கும்படி நம்முடைய பிதாவாகிய தேவனுடைய சித்தத்தின்படியே நம்முடைய பாவங்களுக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்.''*

*இயேசு மரித்ததினால் நம்மை விடுதலையாக்கினார் அல்லது மீட்டார் என்று சொல்ல முடியும்!*

***கொலோசெயர் 1:13,*** *''இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம்''*

*இயேசு கிறிஸ்து தேவனின் மக்களுக்காக பரிகார பலியாக செலுத்தப்பட்டதால் அவர் நம்மை இந்த காலத்தில் இருளின் ஆதிக்கத்திலிருந்து நம்மை மீட்கிறார்.*

*இதன் மறைப்பொருள் விளக்கம் என்ன?*

***V 4: "நம்முடைய பிதாவாகிய தேவனுடைய சித்தத்தின் படியே."***

*தேவன் கிறிஸ்துவை மரணத்திற்கு ஒப்புக்கொடுக்க சித்தம் கொண்டார்.*

*பெந்தகொஸ்தே நாளில் பேதுரு கீழ்க்கண்டவாறு சொல்கிறார்*

***அப்போஸ்தலர்** 2:23, அப்படியிருந்தும், தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின்படியேயும், அவருடைய முன்னறிவின்படியேயும் ஒப்புக்கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை நீங்கள் பிடித்து, அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலை செய்தீர்கள்;"*

*இது எல்லாமே தேவனின் சித்தம் மற்றும் திட்டம், கிறிஸ்து இயேசுவின் மூலம் நிறைவேற்றப்பட்டது. இங்கு விருத்தசேதனத்திற்க்கோ எந்த சடங்குகளுக்கோ சம்மந்தம் இல்லை.*

## *பவுலின் நோக்கம்*

***V 5, "அவருக்கு என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக ஆமென்".***

*உங்களுடைய எல்லா வேலைகளிலும்,*
*நடவடிக்கைகளிலும்,*
*சாதனைகளிலும்,*
*கிரியைகளிலும்,*

*கொள்கைகளிலும்,*
*சடங்குகளிலும்,*
*கொண்டாட்டங்களிலும், மற்றும்*
*தெய்வீக செயல்பாடுகளிலும்.*
*அவர் ஒருவருக்கே மகிமையை செலுத்துங்கள்!*

***1 கொரிந்தியர் 1:29-31,*** *29. மாம்சமான எவனும் தேவனுக்குமுன்பாகப் பெருமைபாராட்டாதபடிக்கு அப்படிச் செய்தார்.30. அந்தப்படி, நீங்கள் அவராலே கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறீர்கள். எழுதியிருக்கிறபடி, மேன்மைபாராட்டுகிறவன் கர்த்தரைக்குறித்தே மேன்மை பாராட்டத்தக்கதாக,31. அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்."*

*இங்கு தான் நாம் கவனிக்க வேண்டும்.*
*"அவர் ஒருவருக்கே சதாக்காலங்களிலும் மகிமை உண்டாவதாக" பவுல் தன்னுடைய கடிதங்களில் இதை பல முறை குறிப்பிட்டு இருப்பார்.*

*எபேசியர், பிலிப்பியர், 2 தீமோத்தேயு மற்றும் கலாத்தியர் போன்ற நிரூபங்களில் காண முடியும்.*

*ஏன்?*

*நாம் மாம்ச கிரியைகளை சார்ந்து வாழும் போது அதாவது விருத்தசேதனம் மற்றும் மாம்ச பெலனை சார்ந்து வாழ்ந்தால் கிறிஸ்து சிலுவையில் செய்ததை அவமதிப்போல் ஆகி விடும்.*

*இதை இன்னும் விளக்கி சொல்ல வேண்டுமானால் தேவன் சிலுவையில் செய்தது முழுமை அடையவில்லை என்று சொல்வது போல் இருக்கும்.*

*பவுல் கிறிஸ்துவின் நிறைவான மற்றும் கிரியைகளை குறித்து உறுதியாக கூறுகிறார். எனவே எல்லா கனமும் மகிமையையும் ஆண்டவர் ஒருவருக்கே செலுத்துகிறார் .*

*இதிலிருந்து நமக்கு மிகப்பெரிய ஆசீர்வாதம் கிடைத்து உள்ளது என்பது தெளிவாகிறது.*

*நீங்கள் ஒரு விஷயம் கவனித்தீர்களா?*
*இங்கு எல்லா இடங்களிலேயும் பவுல் பிதாவையும் குமாரனையும் ஒன்றாகவே குறிப்பிட்டு இருப்பார்?*

*இயேசு நம்முடைய பாவத்தை சுமந்த செயலானது இயேசு தன்னையே பலியாக ஒப்புக்கொடுத்ததையும் தேவனின் சித்தம் நிறைவேறினதையும் காண முடியும்.*

*பவுலுக்கு அப்போஸ்தலன் என்ற அதிகாரம் பிதாவாகிய தேவனாலும் இயேசு கிறிஸ்துவாலும் ஏற்பட்டது.*

*நமக்கு கிருபையும் சமாதானமும் பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவாலும் கிடைத்தது.*

*இதை,*

- ✓ *அவர்கள் ஒன்றாக இணைந்து திட்டம் செய்தனர்.*
- ✓ *அவர்கள் ஒன்றாக இணைந்து வழங்கினர்.*
- ✓ *அவர்கள் ஒன்றாக இணைந்து அறிவித்தனர்.*
- ✓ *அவர்கள் ஒன்றாக இணைந்து பரிசளித்தனர்.*

*அதனால் தான் **யோவான் 5:23** ல் நம் தேவன் சொல்கிறார், அனைவரும் பிதாவாகிய தேவனை கனம் பண்ணுவது போல் குமாரனையும் கனம் பண்ண வேண்டும். குமாரனை கனம்*

*பண்ணாதவன் அவரை அனுப்பின பிதாவையும் கனம் பண்ணவில்லை.*

*சுவிசேஷத்தை புரட்டாதீர்கள் என்று பவுல் பணிவோடு கேட்டுக்கொள்கிறார்.*

*நாமும் அதையே கடைபிடிப்போம்!*

*ஆமென்.*